<u>DEPOSITION OF WITNESS</u>
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:56/2021 Deposition of Witness for : P.W.19**

| | | | |
|---|---|---|---|
| Name | : பாலுச்சாமி | Caste | |
| Father's Name | : முத்துச்சாமி | Calling | |
| Age | : | Taluk | |
| Village | : | District | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 02-02-2026

<u>**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. இந்த வழக்கு சம்மந்தமாக என்னை மாவட்ட காவல் அலுவலகத்தில் வைத்து ஆய்வாளர் லலிதா விசாரித்தார் எந்த தேதியில் விசாரித்தார் என்று நினைவில்லை. இந்த வழக்கு தொடர்பாக ஆய்வாளர் என்னை பலமுறை விசாரித்தார். ஆய்வாளர் என்னை விசாரித்தபோது 01.09.2018 முதல் 24.10.2018 வரை அழைப்பு பட்டியலை தரக் கோரி உயரதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பெற்றுக் கொடுத்ததாக நான் குறிப்பாக சொல்லவில்லை என்று சொன்னால் தேதி குறிப்பிடவில்லை. எந்த அதிகாரி மேற்படி பட்டியலை கோரினார்கள் என்று மேற்படி அதிகாரியின் தகுநிலையை கூட நான் ஆய்வாளிரிடம் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி அழைப்பு பட்டியலை பெரும்போது அதனுடன் இந்திய சாட்சி சட்டம் பிரிவு 65 படியான சான்றை பெறக்கோரி என்னிடம் என்னுடைய உயர் அதிகாரிகள் யாரும் குறிப்பாக உத்தரவிடவில்லை என்று ஆய்வாளர் விசாரணையில் நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய மடிக்கணினியின் சாப்ட்வேர் மூலம் எங்களின் டவர் ஐடிக்கு உண்டான முகவரியை பொருத்தம் செய்ததாக ஆய்வாளர் விசாரணையின் போது நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி தகவல்களை ஆய்வாளர் லலிதாமணிக்கு

ஈமெயில் மூலமாகவும் வாட்ஸ் அப் மூலமாகவும் அனுப்பியதாகவும் என்னை ஆய்வாளர் விசாரித்த போது நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

2. 65 பி சான்று கேட்டு 7.12.2018 ஆம் தேதி வோடபோன் நிறுவனத்திற்கு என்னுடைய உயர் அதிகாரியிடம் கையொப்பம் பெற்று அனுப்பி வைத்ததாக என்னுடைய ஆய்வாளர் விசாரணையின் போது நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். 01.12.2018 ஆம் தேதி ஏர்டெல் நிறுவனத்திலிருந்து மேற்படி 65 பி சான்று கேட்டு உயர் அதிகாரியின் கையொப்பம் பெற்று அனுப்பியதாக என்னை ஆய்வாளர் விசாரித்த போது நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். 26.09.2018 ஆம் தேதி மேற்படி இரண்டு பட்டியல்களையும் பதிவிறக்கம் செய்து அனைத்து பக்கங்களிலும் கையெழுத்திட்டு ஆய்வாளர் வழங்கியதாக ஆய்வாளர் விசாரித்த போது நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி அழைப்பு பட்டியல்களை கோரி எந்த தேதியில் நான் விண்ணப்பம் கொடுத்தேன் என்று ஆய்வாளரிடம் நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரித்த போது நான் 65 பி சான்று வழங்கியதாக குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். மொபைல் எண். 9524445032 என்ற எண் சங்கர் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அ.த.சா.ஆ.21-ல் இணைக்கப்பட்டுள்ள 65 பி சான்றிதழில் ஆவணத்தை யார் எந்த தேதியில் வழங்கினார்கள் என்று குறிப்பாக சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

3. அ.த.சா.ஆ.21-ல் உள்ள தரவுகள் எந்த தேதியில் எந்த கணினியில் யாரால் பதிவிறக்கம் செய்யப்பட்டன என்பது குறித்து குறிப்பாக சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அ.த.சா.ஆ.21-ல் உள்ள தரவுகளில் எந்த பக்கங்களிலும் ஏர்டெல் நிறுவனத்தின் எந்த அதிகாரிகளும் தேதி மற்றும் கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி சான்றில் மேற்படி தரவுகள் எந்த வழக்குக்காக யாருடைய வேண்டுகோளின் பேரில் கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

மேற்படி ஆவணத்தில் நோடல் அலுவலரின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அ.த.சா.ஆ.22–லும் மேற்கண்ட விவரங்கள் குறிப்பாக சொல்லப்படவில்லை என்று சொன்னால் மேற்படி சான்று வழங்கியவரின் கையொப்பம் காணப்படுகிறது மற்ற விவரங்கள் இல்லை. அ.சா.ஆ.21, 22 ஆகியவை ஆய்வாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ.21, 22–ல் டவர் லொகேஷன் குறித்த தரவுகள் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி நிறுவனங்களின் டவர்கள் எந்தெந்த இடத்தில் அமைக்கப்பட்டு இருக்கின்றன என்பது குறித்து மேற்படி நிறுவனங்களிடமிருந்து ஆய்வாளரின் உத்தரவின் பேரில் நான் கேட்டுப் பெறவில்லை என்று சொன்னால் சரிதான்.

4. ஒவ்வொரு செல்போன் நிறுவனத்தின் டவர் அமைக்கப்பட்ட இடத்தை பொறுத்து அதன் கவரேஜ் ஏரியா மாறுபடும் என்று சொன்னால் சரிதான். அது 360 டிகிரி சுற்றளவிலும் கவரேஜ் செய்யப்படும் என்று சொன்னால் சரிதான். டவர் அமைத்துள்ள நிறுவனங்கள் அதன் இடம் அதன் உயரம் ஆகியவற்றை பொறுத்து மாறுபடும் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின்படி சம்பந்தப்பட்ட நபர்கள் என்ன விஷயங்கள் பரிமாறி கொண்டார்கள் என்பது குறித்து என்னால் சொல்ல முடியாது என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் தரவுகள் கோரி என் மூலமாக விண்ணப்பம் அனுப்பப்பட்டதாக எங்கும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

5. ஆய்வாளர் தரவுகள் கோரி SP அலுவலகத்திற்கு மெயில் அனுப்புவார் நான் அதன் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தரவுகளை தரக்கோரி மெயில் அனுப்பினேன். நான் அவ்வாறு மெயில் அனுப்பியதாக நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் எதிலும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான் விசாரணை குறிப்பிட்டவாறு எந்த உயர் அதிகாரிகளும் தரவுகளை சேகரிக்க கோரி உத்தரவிடவில்லை என்று சொன்னால் சரியல்ல எந்த ஆவணங்களையும் நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் பெற்று

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல காவல்துறையில் பணியாற்றுவதால் ஆய்வாளர் ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.02.02 19:41:27 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.